# வீட்டில் பாதுகாப்பை உணரும் உரிமை உங்களுக்கு உள்ளது

Queensland Government

வீடு மற்றும் குடும்ப வன்முறைகள் ஆஸ்திரேலியாவில் ஏற்கத்தக்கவை அல்ல. நீங்கள் யார் அல்லது நீங்கள் எங்கிருந்து வந்திருந்தாலும், வீடு மற்றும் குடும்ப வன்முறை யாரையும் பாதிக்கலாம். இது ஒவ்வொரு சமூகத்திலும் உள்ளது.

**நீங்கள் துன்புறுத்தப்படுகிறீர்கள் அல்லது உங்கள் வீட்டில் அச்சுறுத்தப்படுகிறீர்கள் என்றால், அது உங்கள் தவறு அல்ல. நீங்கள் வெட்கப்படவோ, சங்கடப்படவோ தேவையில்லை.**

**ஆரோக்கியமான உறவு என்பது நம்பிக்கை, ஆதரவு மற்றும் பாதுகாப்பானது. ஒருவருடைய குடும்பத்தில் யாரும் யாராலும் பயப்படக்கூடாது.**

**இதற்கு உதவி கிடைக்கிறது. நீங்கள் பாதுகாப்பாக உணரவில்லை என்றால் உதவி கேட்பது சரியே. உங்களுக்கு ஆதரவு தேவைப்படும்போது, தொடர்பு கொள்ளவும்:**

**அவசர (போலீஸ் அல்லது ஆம்புலன்ஸ்) டிரிபிள் ஜீரோ (000)**

யாரேனும் உடனடி ஆபத்தில் இருந்தால்.

**பெண்களுக்கான 24 மணி நேர ஹெல்ப்லைன் (DV இணைப்பு): (DVConnect) 1800 811 811**

வீட்டில் வன்முறையை அனுபவிக்கும் பெண்களுக்கு இலவச மற்றும் ரகசிய ஆலோசனை மற்றும் ஆதரவு அளிக்கப்படும்.

**புலம்பெயர்ந்த பெண்களுக்கான ஆதரவு மற்றும் சேவைகளுக்கு 07 3846 3490 அழைக்கலாம்**

ஆங்கிலமல்லாத மொழி பேசும் நாடுகளைச் சேர்ந்த பெண்களுக்கு ஆலோசனை மற்றும் அறிவுரை வழங்கப்படும்.

**ஆண்களுக்கான ஹெல்ப்லைன்: (DV இணைப்பு) (DVConnect) 1800 600 636**

உறவு மற்றும் குடும்ப பிரச்சினைகளைச் சந்திக்கும் ஆண்களுக்கு ரகசியமாக உதவி வழங்கப்படும்

**லைஃப்லைன் 131 114**

நீங்கள் தனிப்பட்ட வகையில் நெருக்கடியை சந்திக்கிறீர்கள் எனில், பகல் அல்லது இரவில் எந்த நேரத்திலும் ஆதரவளிக்கப்படும்.

Interpreter

உங்களுடைய மொழிக்கான மொழிபெயர்ப்பாளரை அணுக **13 74 68** என்ற எண்ணில் அழைக்கவும்.

**வீடு மற்றும் குடும்ப வன்முறைகளுக்கு கலாச்சாரம் ஒருபோதும் காரணமாக இருக்க முடியாது.**

**www.qld.gov.au/domesticviolence**

உறவில் உள்ள ஒருவர், தனது சக்தியைப் பயன்படுத்தி மற்றொருவரை கட்டுப்படுத்தவோ, துன்புறுத்தவோ பயமுறுத்தவோ செய்யும்போது வீட்டு மற்றும் குடும்ப வன்முறை நிகழ்கிறது. இது பல்வேறு வடிவங்களில், பல்வேறு உறவுகளுக்கு இடையே, பொதுவாக குடும்பத்திற்குள் அல்லது வீட்டிற்குள் நிகழலாம்.

## உங்கள் துணைவர், குடும்ப உறுப்பினர் அல்லது உங்களுடைய பராமரிப்பாளர் பின்வரும் ஏதேனும் ஒரு முறையில் உங்களை துன்புறுத்துகிறாரா அல்லது அச்சுறுத்துகிறாரா?

### நிதி முறைகேடு

- நீங்கள் சம்பாதிக்கும் பணத்தை எடுத்துக் கொள்கிறாரா அல்லது (சென்டர்லிங்க் நன்மைகள்) உரிமைகளுடன் இணைக்கப்பட்டுள்ளாரா?
- உங்களுக்காக அல்லது உங்கள் குழந்தைகளின் தேவைகளுக்கு போதுமான பணத்தை வழங்கவில்லையா?
- நீங்கள் வாங்குவதை கண்காணித்து கட்டுப்படுத்துகிறாரா?
- உங்களுக்கு வேலை கிடைப்பதைத் தடுக்கிறாரா?

### உடல்ரீதியான முறைகேடு

- தள்ளிவிடுதல், அடித்தல், உங்கள் தொண்டையில் கை வைத்தல், உதைத்தல் அல்லது பொருட்களை உங்களின் மீது தூக்கி வீசுதல் என ஏதேனும் செய்கிறாரா?
- மருத்துவக் கவனிப்பு அல்லது போதுமான உணவு மற்றும் தண்ணீரைப் பெறுவதைத் தடுக்கிறாரா?

### பாலியல் துன்புறுத்தல்

- உங்களுக்கு விருப்பமில்லாத பாலியல் செயல்களுக்கு உங்களை கட்டாயப்படுத்துகிறாரா (திருமண உறவுக்குள்ளாக இருந்தாலும்) ?
- பாலியல் உறவுக்கு உட்படாவிட்டால், உங்களுக்கு தீங்கு செய்வதாக அச்சுறுத்துகிறாரா?

### வாய்மொழி துன்புறுத்தல்

- சாபமிடும் அல்லது புண்படுத்தும் சொற்களை உங்களிடம் பயன்படுத்துகிறாரா?
- பொதுவில் வைத்து, உங்களை தாழ்த்தி பேசுவது, விமர்சிப்பது அல்லது அவமதிப்பதை செய்கிறாரா?

### உணர்ச்சி மற்றும் உளவியல் துன்புறுத்தல்

- நீங்கள் பயனற்றவர், வெட்கப்படுபவர், உதவியற்றவர், துன்பப்படுபவர் அல்லது பயப்படுபவராக உணர வைக்கிறாரா?
- உங்களுக்கு, உங்கள் குழந்தைகள், குடும்ப உறுப்பினர்கள் அல்லது செல்லப்பிராணிகளுக்கு உடல் ரீதியாக தீங்கு விளைவிப்பதாக அச்சுறுத்துகிறாரா?
- உங்கள் பாஸ்போர்ட்டை பிடித்து வைத்துக் கொள்வதாக அல்லது அல்லது உங்களை ஆஸ்திரேலியாவிலிருந்து நாடு கடத்துவதாக அச்சுறுத்துகிறாரா?
- உங்களை விட்டு விலகுவதாக அல்லது உங்களுடைய குழந்தைகளை உங்களிடமிருந்து விலக்கி அழைத்து சென்று விடுவதாக அச்சுறுத்துகிறாரா?
- நீங்கள் அணிவது, பார்ப்பது அல்லது படிப்பதையும் கட்டுப்படுத்துகிறாரா?

### கலாச்சார மற்றும் ஆன்மீக துன்புறுத்தல்

- உங்கள் கலாச்சார அல்லது ஆன்மீக நம்பிக்கைகள் அல்லது நடைமுறைகளை கேலி செய்கிறாரா?
- நீங்கள் விரும்பும் மொழியைப் பயன்படுத்துவதையும், கலாச்சார அல்லது மத நிகழ்வுகளுக்குச் செல்வதையும் தடுக்கிறாரா?
- உங்களைத் துன்புறுத்த அல்லது உங்களுக்கு விருப்பமில்லாத செயல்களைக் கட்டாயப்படுத்தி செய்விக்க மத அல்லது கலாச்சார நம்பிக்கைகளை ஒரு காரணமாகக் கூறுகிறாரா?
- வரதட்சணை கொடுக்காத காரணத்தால் அச்சுறுத்துகிறாரா?

### சமூகத் துன்புறுத்தல்

- நீங்கள் எங்கு செல்கிறீர்கள், யாரைச் சந்திக்கிறீர்கள், அல்லது உங்களை வீட்டிற்குள் பூட்டி வைத்தல் அல்லது உங்களுடைய குடும்பத்தினர் அல்லது நண்பர்களைச் சந்திப்பதைத் தடுத்தல் போன்றவற்றைச் செய்கிறாரா?
- உங்கள் போன் அழைப்புகளையும், சமூக ஊடகங்களையும் கண்காணிக்கிறாரா? (எ.கா. பேஸ்புக், இன்ஸ்டாகிராம்)?
- நீங்கள் மற்றவர்களிடம் பேசினால் பொறாமை கொள்கிறாரா? உங்களிடம் அதிகப்பட்ச உரிமை எடுத்துக் கொள்கிறாரா?

## இவற்றில் ஏதேனும் ஒன்று உங்களுக்கு நேர்ந்தால், இது வீடு மற்றும் குடும்ப வன்முறை ஆகும்.